**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 233/2023**
**Prosecution Witness - PW7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.விஜின் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.08.2025.

(A1 to A9 are Present).

(Accused Present).

<u>முதல் விசாரணை</u>–

நான் கானாவூரில் வசித்து வருகிறேன். நான் தனியார் வாகன ஓட்டுநராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகளை நான் பார்த்திருக்கிறேன். 08.07.2022 தேதியன்று இரவு 8.45 மணியளவில் தெற்கு புதுவிளையில் இருந்து திங்கள் நகர் நோக்கி இன்னோவா காரில் கோபால், ஜெனோ ரெமிட்டஸ் மற்றும் தங்கதுரை ஆகீயோருடன் வந்துகொண்டிருக்கும் போது மணிகண்டன் என்பவர் வெட்டு கத்தியுடன் நான் ஓட்டி வந்த இன்னோவா வண்டியின் குறுக்கே தடுத்தார். கோபால் என் வண்டியில் இருந்து இறங்கினார். மணிகண்டன் வெட்டுகத்தி எடுத்து கோபால் தலையில் வெட்டினார். அவர் சற்று ஒதுங்கவே தலையில் படாமல் தப்பி விட்டார். தலையில் பட்டிருந்தால் அந்த இடத்திலேயே இறந்திருப்பார். ஐயப்பன், கோபு, மற்றும் ரமேஷ் ஆகியோர் கம்பி வைத்திருந்தார்கள். அவர்கள் கோபாலின் கழுத்து, முதுகு, கை ஆகிய பகுதிகளில் அடித்தார்கள். கோபால் கீழே விழுந்துவிட்டார். கிருஷ்ணமணி, ரத்தினசாமி, சுனில், அருள், தாஸ், ஆகியோர் கீழேவிழுந்த கோபாலை சவட்டினார்கள். வண்டியின் கண்ணாடியை உடைத்தார்கள், கெட்ட

வார்த்தை பேசினார்கள். இந்த பக்கம் வந்தால் கொன்று விடுவோம் என்று மிர்ட்டி விட்டு சென்றார்கள். கோபாலை அழைத்துக்கொண்டு சி.எஸ்.ஐ மிசன் மருத்துவமனையில் சேர்த்தோம். அதன் பின்னர் கோபாலிடன் தங்க செயின், கைசெயின் மற்றும் அவர் சட்டை பையில் பணம் ஆகியவற்றை எதிரிகள் எடுத்துசென்றுவிட்டதாக கோபால் அண்ணன் சொன்னார். இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம், போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை 08.07.2022 அன்று இரவு விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும் நேரத்தில் மணிகண்டன் நாங்கள் சென்ற காரை தடுத்ததாக சொன்னேன். போலீசார் விசாரணையில் கோபாலுக்கு கையில் காயம் இருந்தது பற்றி சொன்னேன். கோபாலின் கையில் யார் கம்பியால் தாக்கினார்கள் என்ற விபரத்தை நான் சொன்னேன். யார், யார் எங்கு அடித்தார்கள் என்ற விபரத்தினையும் நான் போலீசார் விசாரணையில் சொன்னேன். ரமேஷ் என்பவர் கழுத்தில் அடித்தாக போலீசாரிடம் சொன்னேன். கோபு என்பவர் முதுகில் அடித்தாக போலீசாரிடம் சொன்னேன். போலீஸ் விசாரணையின் போது எனது வலது கையில் உள்ள கைசெயின் மற்றும் சட்டைபையில் உள்ள பணம் எதிரிகள் எடுத்து சென்றதாக நான் கூறவில்லை. போலீஸ் விசாரணையில் சம்பவத்தின்போது யாரும் கோபாலகிருண்ணனின் உடம்பில் இருந்த நகை மற்றும் பணத்தை எடுத்து செல்லவில்லை என்று நான் சொல்லவில்லை. போலீசார் விசாரணையில் எதிரிகள் எங்களை வழிமறித்தபோது நாங்கள் கண்டு கொள்ளாமல் முன்னேறி சென்றதாக கூறியிருக்கிறேன். அவ்வாறு தெற்கு புதுவிளையில் எந்த இடத்தில் வைத்து வழி மறித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. மணிகண்டன் நடந்து வந்தார். தெற்கிலிருந்து

மல்லன் கருங்காலி அம்மன் கோயில் அருகில் இருந்து வந்தார். கோபு , ஐய்யப்பன், ரமேஷ் ஆகியோர் எங்கள் பின்னால் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். ஒரு பைக்கை நான் பார்த்தேன். கிருஷ்ணமணி, சுனில், அருள், தாஸ் ஆகியோர் பின்னால் இருந்து வந்தார்கள், இருசக்கர வாகனத்தில் வந்தார்களா என்று எனக்கு தெரியாது. மணிகண்டண் மிரட்டியதாக சொல்வதற்கு பிறகு சம்பவம், சுமார் 10 நிமிடங்கள் நடந்தது. அந்த 10 நிமிடங்களில் மணிகண்டன், கோபாலை தாக்கவில்லை என்றால், நான் அதை பார்க்கவில்லை. மணிகண்டன் வெட்டுகத்தியை கையில் வைத்திருந்தார். வெட்டுகத்தியில் கொக்கி இருந்தது , அலுமினிய கொக்கியா என்றால், சரியாக தெரியவில்லை. போலீசார் விசாரணையின் போது மணிகண்டன், கோபு, ரமேஷ், ஐயப்பன் மற்றும் ஆஜர் எதிரிகளின் தகப்பனார் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆஜர் எதிரிகளில் சுனில் மற்றும் ரமேஷ் ஆகியோர் யார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஆஜர் எதிரிகள் 9 பேரில், அவர்கள் பெயர்களை தற்போது என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. ஆஜர் எதிரிகளில் யார் வெட்டுகத்தி மற்றும் கம்பி வைத்து கோபாலனை தாக்கினார்கள் என்ற விபரத்தை என்னால் குறிப்பிட்டு அடையாளம் காட்ட முடியாது என்றால், சரிதான். 9 பேரில் எந்த ஒரு எதிரியின் பெயரை குறிப்பிட்டால் என்னால் அவரை அடையாளம் காட்ட முடியாது என்றால், சரிதான். இன்னோவா காரில் கல் எறிந்தது யார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. கோபாலனுக்கு கை, கழுத்து, முதுகு ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. அந்த காயங்கள் மிதித்தால் ஏற்பட்டதா அல்லது அடித்தால் ஏற்பட்டதா என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. நாங்கள் சம்பவ இடத்தில் இருந்து கிளம்புவதற்கு முன்பாகவே, எதிரிகள் அந்த இடத்தில் இருந்து சென்றுவிட்டார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை, மருத்துவமனைக்கு தான் வந்தார்கள். 08.07.2022 அன்றே போலீசார் மருத்துவமனைக்கு வந்தார்கள். போலீசில் யார் புகார் கொடுத்தார்கள் என்ற

விபரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் நான் இன்னோவா காரை ஆஜர் படுத்தவில்லை. சம்பவ தினதன்று கட்சி மீட்டிங்கிற்கு செல்வதாக கோபாலன் சொன்னார். சம்பவத்திற்கு முந்தைய தினம் வரை ஆஜர் எதிரிகளில் ஊர், பெயர், மற்ற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் குறிப்பிட்ட சம்பவத்திற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்றாலும், நான் கோபால கிருஷ்ணனுக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் எந்த காலகட்டத்திலும் TN 45 BB 0003 காரின் ஓட்டுநராக இருந்தது கிடையாது என்றால், சரியல்ல. புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 233/2023**
**Prosecution Witness - PW8**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. செல்வன் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.08.2025.

(A1 to A9 Present).

<u>முதல் விசாரணை</u>–

நான் உடையார் பள்ளத்தில் வசிக்கிறேன். நான் electrician வேலை பார்க்கிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ–2 போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 04.01.2023 ம் தேதி மாலை 5.30 மணிக்கு நானும், ஐயப்பன் என்பவரும், தலகுளம் உடையார் பள்ளம் சிவசுடலை மாடன் கோயில் அருகில் நின்றுகொண்டிருந்தபோது, கோவில் மதில்சுவர் ஓரத்தில் TN 75 P 2251 Passion Pro இருசக்கர வாகனம் இருந்தது. அதனை இரணியல் காவல் ஆய்வாளர் போலீஸ் பார்டியுடன் வந்து 08.07.2022 அன்று உடையார் பள்ளத்தில் நடந்த கொலை முயற்சி வழக்கு சம்பந்தமாக எங்கள் முன்னிலையில் வைத்து அத்தாட்சி தயார் செய்து, கைபற்றியதில் நானும், ஐயப்பன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது

எதிரிகளுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 233/2023**
**Prosecution Witness - PW9**

| | | |
|---|---|---|
| Name | : | திரு ஐயப்பன். |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.08.2025.

(A1 to A9 Present).

முதல் விசாரணை–

நான் உடையார் பள்ளத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னிம் ஒரு தாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ– 3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

கடந்த 04.01.2023 ம் தேதி மாலை 5.30 மணிக்கு நானும், செல்வன் என்பவரும், தலகுளம் உடையார் பள்ளம் சிவசுடலை மாடன் கோயில் அருகில் நின்றுகொண்டிருந்தபோது, கோவில் மதில்சுவர் ஓரத்தில் TN 75 P 2251 Passion Pro இருசக்கர வாகனம் இருந்தது. அதனை இரணியல் காவல் ஆய்வாளர் போலீஸ் பார்டியுடன் வந்து 08.07.2022 அன்று உடையார் பள்ளத்தில் நடந்த கொலை முயற்சி வழக்கு சம்பந்தமாக எங்கள் முன்னிலையில் வைத்து அத்தாட்சி தயார் செய்து, கைபற்றியதில் நானும், செல்வன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது

எதிரிகளுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 233/2023**
**Prosecution Witness - PW10**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.கோபி |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.08.2025.
(A1 to A9 Present).
முதல் விசாரணை–

நான் தெற்கு புதுவிளையில் வசித்து வருகிறேன். நான் கொத்தவேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் கிருஷ்ணமணியை எனக்கு தெரியும். TN 75 P 2251 Passion Pro இருசக்கர வாகனம் என் வீட்டில் தான் இருந்தது. போலீசார் என்னை இருசக்கர வாகனம் பற்றி விசாரித்தார்கள். 08.07.2022 அன்று எனது இருசக்கர வாகனம் வீட்டில் தான் இருந்தது. போலீசார் விசாரணையில் 08.07.2022ம் தேதி இருசக்கர வாகனம் என் கையில் தான் இருந்ததாக கூறினேன்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

போலீசார் விசாரணையில் , 08.07.2022 தேதி மாலை 5 மணிக்கு எதிரி கிருஷ்ணமணி எனது இருசக்கர வாகனத்தை வாங்கி சென்றதாக கூறியுள்ளேன் என்றும், பின்னர் கோபால கிருஷ்ணன் என்பவரின் காரை வழிமறித்து தாக்கி கொலை செய்ய முயன்ற வழக்கில் கிருஷ்ணமணி இந்த வண்டியை பயன்படுத்தியதாக கேள்விபட்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சுமூகமான நிலையில் இருப்பதினால்

எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**